**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப்பணித்திட்டம்)**
**செயல்முறைகள், சென்னை –6.**
**ந.க.எண்.19534/எம்/ இ2/2022,நாள். 13.04.2022.**

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக்கல்வி – 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்து பல்துறை நிபுணர்களின் வழிகாட்டுதல் – நேரலை ஒளிபரப்பு நிகழ்ச்சி – 'நான் முதல்வன்' என்ற இணையதளம் வாயிலாக மாணவர்களின் விருப்பத்திற்கேற்ற உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த பல்வேறு தகவல்களை அளித்தல் – அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் உரிய ஏற்பாடுகளைச் செய்ய சார்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு தக்க அறிவுரை வழங்குதல் – தொடர்பாக. |
| பார்வை: | 2021–22–ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு பள்ளிக் கல்வித்துறை மானியக்கோரிக்கை எண் 43–ன் மீது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்புகள். |

பள்ளிக்கல்வித் துறையில் இயங்கிவரும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த சந்தேகங்களைத் தீர்க்கும் வகையிலும் மாணவர்கள் அவற்றைப் பற்றிய பரந்த அறிவைப் பெறுவதற்காகவும் 'நான் முதல்வன்' என்ற இணையதளம் உருவாக்கப்பட்டு மாணவர்களுக்கு பயன்படக்கூடிய உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த பல்வேறு தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பல்துறை நிபுணர்களைக் கொண்டு வரும் 18.04.2022 மற்றும் 19.04.2022 ஆகிய நாட்களில் முதற்கட்டமாகவும் 22.04.2022 மற்றும் 23.04.2022 ஆகிய நாட்களில் இரண்டாம் கட்டமாகவும் நேரலை மூலமாக இரண்டு மணிநேர வழிகாட்டுதல் நிகழ்ச்சியும் ஒரு மணிநேர இணையதளத்தில் தகவல் தேடும் நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**நேரலை அமர்வுகளின் சிறப்பம்சங்கள்:**

1. மருத்துவம் மற்றும் அது சார்ந்த அறிவியல், பொறியியல் மற்றும் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம் (IT), வங்கி, பணப்பரிவர்த்தனை சேவைகள் மற்றும் காப்பீடு (BFSI), அரசு, விவசாயம், வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் (FMCG), தொலைத்தொடர்பு, சட்டம் மற்றும் பாதுகாப்பு சேவைகள் போன்ற பல துறைகளைச் சேர்ந்த நிபுணத்துவம் பெற்ற பேச்சாளர்கள் பங்கேற்று, குறிப்பிட்ட துறைகளில் உள்ள பல்வேறு உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளனர்.

2. மேலும், உயர்கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு உணர்த்தி ஊக்குவிப்பதோடு பள்ளிக் கல்விக்குப் பின் தொடரும் நுழைவுத் தேர்வுகள் மற்றும் பல்வேறு உயர்படிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் தேவையான முன்னேற்பாடுகளை கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு செய்திடவேண்டும்.

1. கீழே உள்ள அட்டவணைகளின்படி, அனைத்து அறிவியல் பிரிவு மாணவர்களும் 18மற்றும் 22ஆம் தேதிகளிலும், மற்ற பிரிவில் பயிலும் மாணவர்கள் 19 மற்றும் 23 ஆம் தேதிகளிலும் ஒரே இடத்தில் கூடியிருக்க வேண்டும்.
2. மாணவர்கள் தங்களுடன் நோட்டுப் புத்தகம் மற்றும் பேனா கொண்டு வர வேண்டும்.
3. முதல் இரண்டு மணிநேர நேரலை நிகழ்ச்சிக்கு (Live streaming) புரொஜெக்டர் மற்றும் அகன்ற திரை இருக்க வேண்டும்.
4. அடுத்த ஒரு மணிநேரத்தில், அதாவது, லைவ் ஸ்ட்ரீமிங் அமர்வுக்குப் பிறகு, மாணவர்கள் 'நான் முதல்வன்' இணையதளத்தைப் பயன்படுத்தி அவர்தம் விருப்பப்பாடங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளவும் அதில் கொடுக்கப்பட்டுள்ள ஆய்வுக்கான கணக்கெடுப்புப் படிவத்தை நிரப்பவும் 20 நிமிடங்கள் கொடுக்க ப்பட வேண்டும்.

18 மற்றும் 22 ஏப்ரல் 2022.

| பிரிவுக் குறியீடு | பிரிவின் பெயர் |
|---|---|
| 2503 | இயற்பியல்கணிதம்/உயிரியல்/வேதியியல்/ |
| 2502 | இயற்பியல் / வேதியியல்/ கணினி அறிவியல்/கணிதம் |
| 2608 | இயற்பியல்விலங்கியல்/தாவரவியல்/வேதியியல்/ |
| 2601 | இயற்பியல்/வேதியியல்/உயிரியல்/கணினி அறிவியல் |
| 2922 | அடிப்படை மின் பொறியியல் |
| 2604 | இயற்பியல் நர்சிங்/உயிரியல்/வேதியியல்/ |
| 2921 | அடிப்படை மெக்கானிக்கல் இன்ஜினியரிங் |
| 2923 | அடிப்படை எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் |
| 2602 | இயற்பியல் நுண்ணுயிரியல்/உயிரியல்/வேதியியல்/ |
| 2931 | நர்சிங் |
| 2607 | இயற்பியல்/உயிரியல்/வேதியியல்/மனையியல் |
| 2605 | இயற்பியல்.நியூட்ரி/உயிரியல்/வேதியியல்/&உணவுமுறை |
| 2603 | இயற்பியல்உயிர் வேதியியல்/உயிரியல்/வேதியியல்/ |

| | |
|---|---|
| 2924 | அடிப்படை சிவில் இன்ஜினியரிங் |
| 2925 | அடிப்படை ஆட்டோமொபைல் இன்ஜினியரிங் |
| 2606 | இயற்பியல்/உயிரியல்/வேதியியல்/COMM. ஆங்கிலம் |
| 2504 | இயற்பியல்கணிதம்/உயிர் வேதியியல்/வேதியியல்/ |
| 2505 | இயற்பியல்/வேதியியல்/COMM . ஆங்கிலம்கணிதம்/ |
| 2506 | இயற்பியல்/கணிதம்/வேதியியல்/ மனையியல் |
| 2501 | இயற்பியல்கணிதம்/புள்ளியியல்/வேதியியல்/ |

19 மற்றும் 23 ஏப்ரல் 2022.

| பிரிவுக் குறியீடு | பிரிவின் பெயர் |
|---|---|
| 2702 | பொருளாதாரம்கணக்கு/வணிகம்//COMP. APPL. |
| 2704 | வரலாறுகணக்கு/வணிகம்/பொருளாதாரம்/ |
| 2708 | பொருளாதாரம்/வணிகம்/கணக்கு/BUSI.கணிதம் & நிலை |
| 2962 | கணக்கு மற்றும் தணிக்கை |
| 2951 | வேளாண் அறிவியல் |
| 2701 | புள்ளியியல்ணக்குக/வணிகம்/பொருளாதாரம்/ |
| 2802 | புவியியல்/பொருளாதாரம்/வரலாறு/COMP.APPL. |
| 2804 | புவியியல்/பொருளாதாரம்/வரலாறு/அரசியல் அறிவியல் |
| 2961 | அலுவலக மேலாண்மை மற்றும் Secretaryship |
| 2806 | புவியியல்/பொருளாதாரம்/வரலாறு/ADV.(TAM) |
| 2941 | ஜவுளி மற்றும் ஆடை வடிவமைப்பு |
| 2707 | பொருளாதாரம்/குகணக்/வணிகம்/ADV.(TAM) |
| 2705 | பொருளாதாரம்/அரசியல் அறிவியல்கணக்கு/காமர்ஸ்/ |
| 2805 | புவியியல்பொருளாதாரம்/வரலாறு//E&I கலாச்சாரம் |
| 2801 | புள்ளியியல்பொருளாதாரம்/வரலாறு/புவியியல்/ |
| 2942 | உணவு சேவை மேலாண்மை |
| 2703 | COMM ஆங்கிலம்கணக்கு/காமர்ஸ்/பொருளாதாரம்/ |
| 2926 | ஜவுளி தொழில்நுட்பம் |
| 2706 | பொருளாதாரம்/கணக்கு/வணிகம்/E&I கலாச்சாரம் |
| 2803 | புவியியல்பொருளாதாரம்/வரலாறு/ஆங்கிலம் .கம்யூ/ |
| 3001 | CBSE / ICSE – கலைக் குழுக்கள் |
| 3002 | CBSE / ICSE – அறிவியல் குழுக்கள் |
| 3003 | CBSE / ICSE – வர்த்தக குழுக்கள் |
| 3004 | CBSE / ICSE – தொழிற்கல்வி குழுக்கள் |
| 3005 | CBSE / ICSE – பிற குழுக்கள் |

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் மேற்குறிப்பிடப்பட்ட நாட்களில் இந்நேரலை நிகழ்வுக்குத் தேவைப்படும் தகுந்த நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுக்குமாறு தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்களை அறிவுறுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

13.4.22

பள்ளிக்கல்வி இணை இயக்குநர்
(நாட்டுநலப்பணித்திட்டம்) (பொ)

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
நகல்
அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை –9. (தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)